IN THE LABOUR COURT, SALEM

CAMP COURT AT DHARMAPURI

I.D.No.27 of 2020

06.09.2024

RW2– திரு. துரைராஜ்

குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

2011ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரை நான் ஒசூர் நகர் கிளையில் பணியில் இல்லை என்றால் சரிதான். இதே கால கட்டத்தில் நான் மண்டல அலுவலகத்தில் ஒழுங்கு நடவடிக்கை பிரிவில் பணியில் இல்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. Ex.R1 புகார் மற்றும் Ex.R5 குற்றச்சாட்டு குறிப்பாணை ஆகியவைகளில் மனுதாரருக்கு 29.09.2011 முதல் எந்த வழித்தடபேருந்தில் பணி ஒதுக்கப்பட்டிருந்தது என்ற விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஒசூர் நகர் கிளையில் மொத்தம் எத்தனை பேருந்துகள் 2011 முதல் 2012 வரை இயக்கப்பட்டது என்பது குறித்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால சரிதான். அந்த காலகட்டத்தில் ஒசூர் நகர் கிளையில் எத்தனை ஓட்டுநர்கள் பணியில் இருந்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 29.09.2011 முதல் 26.10.2012 வரை மனுதாரரை பணிக்கு ஆஜராகுமாறு கடிதம்

எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். ஒசூர் நகர் கிளையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஓட்டுநர்கள் தவிர மாற்று ஓட்டுநர்களும் தயாராக இருப்பார்கள் என்றால் சரிதான். பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஓட்டுநர் பணிக்கு வரவில்லை என்றால் மாற்று ஓட்டுநருக்கு பணி ஒதுக்கீடு செய்யப்படும் என்றால் மாற்று ஓட்டுநர் இல்லாத நிலையில் பேருந்து இயக்குவதில் சிரமம் ஏற்படும். பேருந்து இயக்க பணிக்கு நேர அட்டவணை பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். பேருந்து இயக்க பணிகள் உரிய நேரத்தில் இயக்கப்படாமல் பாதிக்கப்பட்டது என்பதை காட்ட நேர அட்டவணை பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மூலம் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் என்னால் கையெழுத்து போட்டு வழங்கப்பட்டது இல்லை என்றால் சரிதான். ஓட்டுநர்கள் பணிக்கு வராமல் விடுப்பிற்காக விண்ணப்பிக்கும்போது அது சம்பந்தமாக பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். அந்த விடுப்பிற்கான தகவல் பதிவேடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். Ex.R12 மனுதாரரின் பணிப்பதிவேடு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் கழகத்திற்கு சான்றளிக்கப்பட்ட நிலையாணை உள்ளதா என்றால் உள்ளது. அந்த சான்றளிக்கப்பட்ட நிலையாணையின் கீழ் மனுதாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் Ex.R10

பணிநீக்க உத்தரவில் மாதிரி நிலையாணை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றளிக்கப்பட்ட நிலையாணை கடந்த ஜூன் மாதம் முதல் அமுலில் உள்ளது. மனுதாரருடைய வழக்கு விபரங்கள் எதுவும் தெரியாமல் நிர்வாகத்தின் தூண்டுதலின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் வழக்கிற்கும், குற்றச்சாட்டு காலத்தில் என்னுடைய பணிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. குற்றச்சாட்டில் சொல்லப்பட்டவாறு மனுதாரர் பணிக்கு ஆப்செண்ட் ஆகவில்லை என்றால் சரியல்ல. சட்டவிரோதமாக மனுதாரரை பழிவாங்கும் நோக்கத்துடன் பணிநீக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுப்பரிகாரத்தை வழங்க எங்கள் நிர்வாகம் கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem.